14th December 1961]

(இ) அறிக்கையின் நகல் சட்டசபை நூல் நிலையத்தில் வைக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Yes, Sir.

(இ) The report is under examination and pending examination, the Government do not propose to place a copy of the report in the Library of the State Legislature.

SRI N. R. THIAGARAJAN : ஸார், காங்கிரஸ் கட்சி இது போன்று செய்யும்போது, இப்போது இங்கிருக்கிற 3, 4 எதிர்க் கட்சியினரும் இந்த விலைவாசியைக் குறித்து ஏதேனும் ரிப்போர்டு தயாரித்து அனுப்பி இருக்கிறார்களா ? அப்படி அனுப்பியிரா விட்டால், அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : யாராவது அனுப்பி யிருந்தால், அதை ஏற்றுக்கொண்டு, பரிசீலனை செய்யலாம். ஆனால் ஒருவரை அனுப்பும்படி வற்புறுத்திச் சொல்லவேண்டிய நிமித்தம் இல்லை.

Bee-keeping training institute (Polur taluk)

* 2354 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், போளூர் தாலுகா பட்டறைக் காடு தேனீ வளர்ப்புப் பயிற்சி பள்ளியில் எத்தனை பேர்கள் இது வரை பயிற்சி பெற்றனர் ?

(இ) இப்போது எத்தனை பேர்கள் பயிற்சி பெறுகின்றனர் ?

(உ) இவர்களில் எத்தனை பேர்களுக்கு எவ்வளவு உதவித் தொகை தரப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) 31 candidates.

(இ) 10 candidates.

(உ) 10 candidates—Rs. 1,200 as stipend (21 without stipend).

SRI S. M. ANNAMALAI : ஸார், 10 பேர்களுக்குத்தான் இந்த ஸ்டைபண்டு கொடுப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். மீதி 21 பேருக்கு கொடுப்பதற்கு முன்வர வில்லை. இவர்கள் ஜவ்வாது மலைக்குப் போய் பயிற்சி பெற்று வருவதிலே மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மீதி உள்ளவர் களுக்கும் இந்த ஸ்டைபண்டு கொடுக்க முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் திட்டத் தின்படி 10 பேருக்குதான் ஒவ்வொரு நிலையத்திலும் மாதம் ஒன்றுக்கு 40 ரூபாய் கொடுப்பது என்று ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது. அதனாலே, 10 பேருக்கு மேலே கொடுப்பதற்கில்லை.